1979 ஏப்ரல் 23,

2. உரிமைப் பிரச்னைகள்,

அ. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது [தீர்ப்பு]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. விஜயராகவன் அவர்கள் 4-4-1979 அன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை ஒன்றினை அவையில் எழுப்பினார். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்துள்ளார். பேரவையில் பிரச்னை எழுப்பப் பட்டபோது உடனடியாகத் தொலைபேசி மூலம் துறையிடம் தொடர்பு கொண்டு அவர்கள் கொடுத்த தகவலைத் தாம் அவைக்கு அளித்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி தவறான தகவல் அளித்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் கூறியிள்ளார். மேலும் அவைக்குத் தவறான தகவலைத் தரவேண்டுமென்ற எண்ணத்துடன் தாம் அப்படிக் கூறவில்லை என்றும் அவர் விளக்கியுள்ளார்.

[முற்பகல் 9-59]

பேரவைக்கு அளிக்கப்படும் தகவல் தவறானது என்று தெரிந்து, வேண்டும் என்றே பேரவையை திசை திருப்பும் எண்ணத்துடன் அத்தவறான தகவல் பேரவைக்கு அளிக்கப் பட்டால்தான் அது அவை உரிமை மீறிய செயல் ஆகும்.

மாண்புமிகு அமைச்சர்கள் பேரவைக்குத் தகவல் அளிக்கும் போது தாங்கள் அளிக்கும் தகவல் சரியானதுதானா என்று தெரிந்த பிறகு தகவல் பேரவைக்கு அளிப்பது நல்லது. ஏனெனில் பேரவைக்குத் தெரிவிக்கப்படும் தகவலுக்கு அத் தகவலை அளிக்கும் அமைச்சர்தான் பொறுப்பாகிறார்.

ஆயினும் இங்கு எழுப்பப்பட்ட பிரச்னையில் தவறான தகவலை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார் என்பதற்கான எந்தவித ஆதாரமும் அளிக்கப்படவில்லை. ஆகவே, இப்பிரச் னையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.